முருகப்பெருமான் துணை

**மகான் வியாசமுனிவர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**02.09.2023**, சனிக்கிழமை

1. அண்ணலாய் வந்த தலைவனே
அத்தனாய் அருளும் தருமனே
மண்ணுலகை மீட்டு வழிநடத்த
மாதவசியாக வந்த அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சோபகிருது யாளிதிங்கள்
வரங்களென மூவையோர் திகதி காரிவாரம்
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 16 ம் நாள், 02.09.2023, சனிக்கிழமை)
வழங்குவேன் அறிவுரை ஆசி
3. ஆசிதனை வியாசமுனிவர் யானும்
அருளுவேன் உலகநலம் பெற
வாசிவென்ற ஞானிகள் படை
வலம்வரக் கண்டேன் அரங்கனை
4. அரங்கனை சுற்றி உள்ள
அன்னதான தருமபலத்துக்கு
வரங்கள் தந்து அன்னபூரணியே
வாழ்த்தியே அரங்கனுடனிருக்க
5. இருக்கவே வியாசனும் நாடியே
இதுவல்லவோ மாதருமம் என
கருத்தாகப் பிரணவக் குடிலில்
கண்டுமே கலந்து விட்டேன்
6. கலந்துமே பேராசி தந்து
கலங்கி வருந்தி வேண்டியே
பலம்பெற வரும் மக்களுக்கு
பாவவினை பசிபிணி துன்பம் போக்கி

7. போக்கியே வியாசர் யானும்
புண்ணிய அரங்கன் கரம்வழி
ஆக்கமுடன் ஆற்றலாக இறங்கி
அற்புதம் தனை அருளுகின்றேன்
8. அருளவே அன்னபூரணித்தாய்
அன்னக்கொடி அரங்கன் தடம்
அருளாக தருமமாக பறக்க
அகிலத்தில் தருமம் தழைத்து
9. தழைத்துமே இடர்கள் விலகி
தன்னிறைவு உணவு வகைபட
பலமுற கழனி கிருஷி தேட்டெனெ
பாடிடுவேன் சகல துறையும் காணும்
10. காணவே வஞ்சம் சூழ்ச்சி
கண்டதொரு மானிட ஆட்சி
தானாக வலுவிழந்து நின்று
தரணிவிட்டு மாற்றமாக
11. ஆகவே தருமத்தாய் ஆளும்
ஆற்றல்மிக்க ஞான ஆட்சி
செகமே கண்டு பாதுகாப்புறும்
செப்பிய அறிவுரை ஆசிமுற்றே

–சுபம்–